கோயம்புத்தூர், பெரம்பலூர், அரியலூர், வேலூர், தேனி மற்றும் நாமக்கல் ஆகிய 6 மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு (wireless sets) சாதனங்களைப் பொருத்துதல்.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி4) துறை

அரசாணை (நிலை) எண்.177 நாள். 21 .11.2008

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி4) துறை, நாள் 2.8.2007.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை—15, கடிதம் எண்.33795/07/பரா1.II-3, நாள் 30.9.2008.

---

**ஆணை:**

மாண்புமிகு அமைச்சர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அவர்கள் 12.4.2007 அன்று சட்டப் பேரவையில், இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் பொழுதும், ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கத்தை தீவிரமாக கண்காணிக்கும் பொருட்டும் மாவட்டங்களில், மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்கள் (wireless sets) வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செய்தார்கள். அதனைத் தொடர்ந்து, கீழ்க்கண்ட 24 மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்களைப் பொருத்துவதற்கு ரூ.3.76 கோடி மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி | 7. ஈரோடு | 13. கன்னியாகுமரி | 19. சேலம் |
| 2. மதுரை | 8. கரூர் | 14. திருவாரூர் | 20. நீலகிரி |
| 3. சிவகங்கை | 9. திண்டுக்கல் | 15. திருவள்ளூர் | 21. கிருஷ்ணகிரி |
| 4. விருதுநகர் | 10. தஞ்சாவூர் | 16. காஞ்சிபுரம் | 22. நாகப்பட்டினம் |
| 5. திருவண்ணாமலை | 11. புதுக்கோட்டை | 17. விழுப்புரம் | 23. திருநெல்வேலி |
| 6. தருமபுரி | 12. இராமநாதபுரம் | 18. கடலூர் | 24. தூத்துக்குடி |

எஞ்சிய மாவட்டங்களான கோயம்புத்தூர், பெரம்பலூர், (தற்போது பெரம்பலூர் மற்றும் அரியலூர்), வேலூர், தேனி மற்றும் நாமக்கல் ஆகிய 6 மாவட்டங்களில் 2008—2009—ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. தற்போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே 2—ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர், பெரம்பலூர், அரியலூர், வேலூர், தேனி மற்றும் நாமக்கல் ஆகிய

6 மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்களை (wireless sets) வாங்கி பொருத்துவதற்கு பொருள் வழங்கல் மற்றும் தீர்வு தலைமை இயக்குநரின் (DGS&D rate) விலைப்படி, ரூ.1,16,55,100/– (ரூபாய் ஒரு கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து நூறு மட்டும்) ஆகும் என்று தெரிவித்துள்ளார்.

3. 2008–2009–ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் கம்பியில்லா தகவல் சாதனங்கள் பொருத்துவதற்கு ரூ.78.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள், 24 மாவட்டங்களிலும் பொருத்திய பின்னர் 2007–2008–ஆம் நிதியாண்டில் ரூ.42,28,688/– (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்தெட்டு ஆயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு மட்டும்) சேமிப்பு கிடைத்துள்ளது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். விழுப்புரம், சேலம், திருவண்ணாமலை மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களான உதவி செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி), உதவி செயற் பொறியாளர் (பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்) மற்றும் உதவி செயற்பொறியாளர் (குடிநீர் வழங்கல்) ஆகிய அலுவலர்களின் வாகனங்களுக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் பொருத்துவதற்கு ரூ.1,20,062/– ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை மேற்குறிப்பிட்ட சேமிப்புத் தொகையில் அனுமதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே 2007–2008–ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட மொத்தம் ரூ.3.76 கோடியில், ரூ.41,08,626/– நிகரச் சேமிப்பாக உள்ளது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேலே விவரித்த சூழ்நிலையில் கோயம்புத்தூர், பெரம்பலூர், அரியலூர், வேலூர், தேனி மற்றும் நாமக்கல் ஆகிய 6 மாவட்டங்களில் தகவல் தொடர்பு சாதனங்கள் பொருத்துவதற்கு 2008–2009–ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கத்திலிருந்தும் மற்றும் 2007–2008–ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட தொகையில் இருக்கும் நிகரச் சேமிப்புத் தொகையான ரூ.41,08,626/– இலிருந்தும் செலவு மேற்கொள்ளலாம் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். ஆகவே இதற்குரிய ஆணையை வழங்குமாறு அரசினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பிவைத்த செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தபின் அதனை ஏற்கலாமென முடிவு செய்தது. அதன்படி, கோயம்புத்தூர், பெரம்பலூர், அரியலூர், வேலூர், தேனி மற்றும் நாமக்கல் ஆகிய 6 மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்களை நிறுவுவதற்கு ரூ.116,55,100/– (ரூபாய் ஒரு கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து நூறு மட்டும்) நிருவாக ஒப்பளிப்பு செய்தும் மற்றும் 2008–2009–ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கத்திலிருந்து ரூ.75,46,474/–(ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நானூற்று எழுபத்து நான்கு மட்டும்)–ஐ, ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

7. மேலும் 2007–2008–ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் உள்ள சேமிப்பு தொகை ரூ.42,28,688/– (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து

இருபத்தெட்டாயிரத்து அறுநூற்று எண்பத்து எட்டு மட்டும்)–இல், மேலே பத்தி 6–ல் குறிப்பிடப்பட்டுள்ள 6 மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்களை நிறுவுவதற்கு ரூ.41,08,626/– (ரூபாய் நாற்பத்தோரு இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று இருபத்தாறு மட்டும்) தொகையினை செலவு செய்ய அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. இதில், மீதமுள்ள ரூ.1,20,062/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரத்து அறுபத்தி இரண்டு மட்டும்) விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களின் கூடுதல் தேவையைப் பூர்த்தி செய்திட செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 6 மற்றும் 7–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட/அனுமதிக்கப்பட்ட தொகையை மாவட்டங்களின் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரமளித்து அரசு ஆணையிடுகிறது.

9. கம்பியில்லா தகவல் தொடர்பு அலைவரிசையை பெறுதல், கருவிகளைக் கொள்முதல் செய்வதற்கான திட்டம் மற்றும் இதற்கான மாவட்ட அளவிலான குழு அமைத்தல், கருவிகளின் ஆண்டு பராமரிப்பு செலவினம் மற்றும் பணியாளர் நியமனம் குறித்து பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் குறிதது இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

10. மேலே பத்தி 6–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 102 சமுதாய நல வளர்ச்சி – I. திட்டத்தில் சேராதது – KO மாவட்டங்களில் கம்பியில்லாத் தந்தி ஏற்பாட்டு முறையை அமைத்தல் – 09. உதவித் தொகை 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை. (ததொகு 2515 00 102 KO 0939)".

13. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அலுவல் சார்பற்ற .எண்.70716/ஊவ/2008, நாள்17.11.2008–இல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.

## இணைப்பு

(i) தகவல் தொடர்பு அலைவரிசையை பெறுதல்

கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்துவதற்கு 146–174 Mhz வரை உள்ள அலைவரிசையை புது டெல்லியில் உள்ள தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கம்பியில்லா தகவல் தொடர்பு திட்ட குழுவிடம் அனுமதி பெற வேண்டும். தற்போது உள்ள நடைமுறைப்படி முதல் கட்டமாக மேற்கண்ட மத்திய அரசு துறையிடம் பல்வேறு மாவட்டங்களுக்கு தேவையான ரிப்பீட்டர் அலைவரிசையில் (Repeater Frequency) ஒதுக்கீடு செய்வதற்கு உரிய படிவத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும். கம்பியில்லா தகவல் தொடர்பு திட்ட குழுவின் அலைவரிசை ஒதுக்கீட்டுக்கான கொள்கை அளவிலான கடிதம் பெறப்பட்டவுடன் கருவிகள் கொள்முதல் செய்வதற்கான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

(ii) கருவிகள் கொள்முதல் திட்டம்

கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள் மத்திய அரசின் பொருள் வழங்குதல் மற்றும் தீர்வு தலைமை இயக்குநர், நிர்ணயித்த ஒப்பந்த விலையில் (DGS&D rate) வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(iii) மாவட்ட அளவிலான குழு

மாவட்ட அளவில் மத்திய அரசின் பொருள் வழங்குதல் மற்றும் தீர்வு தலைமை இயக்குநர், நிர்ணயித்த ஒப்பந்த விலையில் கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள் கொள்முதல் செய்வதை முடிவு செய்ய, கீழ்க்கண்டவாறு குழு அமைக்கப்பட வேண்டும்:-

| | | |
|---|---|---|
| (i) | மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| (ii) | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் செயலாளர் |
| (iii) | செயற் பொறியாளர் (ஊ.வ.) | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – உறுப்பினர் |
| (iv) | உதவி இயக்குநர் (கணக்கு) | உறுப்பினர் |
| (v) | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | உறுப்பினர் |

(iv) கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள்
ஆண்டு பராமரிப்பு (Annual maintenance)

இந்த கருவிகளுக்கான உத்திரவாத காலம் முடிவடைந்தபின் இக்கருவிகளை பராமரிப்பதற்காக, ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (Annual maintenance contract) ஒன்றை (கருவிகளின் விலை மதிப்பிற்கு 2% மிகைப்படாமல்) எற்றுக் கொள்ளும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இதற்கான தொகையை, இயக்குநகரத்தில் வைத்துள்ள இத்திட்டத்தின் எஞ்சியுள்ள தொகையிலிருந்து அளிக்கப்படும். மேலும் இந்த செலவினம் சம்பந்தமாக கூடுதல் தொகை தேவைப்படின், ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைப் பொறுத்த வரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக நிதியிலிருந்தும், செயற் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலக நிர்வாக நிதியிலிருந்தும் பிற அலுவலகங்களைப் பொறுத்தவரை எதிர்பாராத சில்லரைச் செலவினங்களுக்கான தொகையிலிருந்தும் செலவு செய்து கொள்ளலாம்.

(v) பணியாளர் நியமனம்

கம்பியில்லா தகவல் தொடர்பு சாதன திட்டத்தை செயல்படுத்துவதற்கு புதிய பணியாளர் நியமனம் எதுவும் தேவையில்லை; வானொலி மேற்பார்வையாளர்கள் (Radio Supervisors) உள்ளிட்ட தற்போது உள்ள பணியாளர்களை பயன்படுத்தி தேவைப்படும் அன்றாட பணிகளை மேற்கொள்ளலாம்.

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.